COLLOQUIAL
TAMIL & ENGLISH
PARALLEL PROVERBS

BY

A. P. M. MUDALIAR

PRINTED AT
THI'' PRESS, CHOOLAI, MADRAS.
1928.

This book

is

most earnestly

Dedicated

to my

earliest and most sincere friend

Mr. C. M. JAYARAM MUDALIAR,

Appraiser,

Custome House, Madras.

பழமொழிகள்.

Proverbs.

ன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
onor thy father and mother.

ன்புக்கு ஒருவனை
God is love (*Unanishad.*)

அவன் அசையாது அணுவும் அசையாது.
God is hidden power behind everything.

அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்றுகொல்லும்.
1. The mill of God grinds late, but grinds to powder.
2. God stays long but strikes at last.

அரசன் கல்லின்மேலே கத்திரிகாய்க்கும் என்றால்,
கொத்து ஆயிரம் குலை ஆயிரம் என்பார்கள்.
A flatterer's throat is an open sepulchre. 5

அடக்கம் ஆயிரம் பொன் தரும்.
Humility often gains more than pride.
By hearing scripture man acquires;
By doing it his soul aspires;
The utmost love is conquering sense,
Which cometh of obedience.

சல் வீடு வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினிகிடப்பான்.
An envions man waxes lean at the fortune of his neighbour.

அமாவாசைப் பருக்கை என்றைக்கும் கிடைக்குமா?

1. Christmas Comes but once a year.
2. Angels visit far and few between.

1. அகோர தபசி விபரீத சோரன்.
2. வேடமோ தவவேடம் மனதிலோ அவவேடம்.

All saint without, all devil within.

அக்கரை மாட்டுக்கு இக்கரைப் பச்சை.

Distance lends enchantment to the view. 10

1. அரத்தை அரம் கொண்டும் வயிரத்தை வயிரம் கொண்டும் அரக்கவேண்டும்.
2. பாம்பினது கால் பாம்பறியும்.

Diamond cuts diamond.

அச்சி என்றால் உச்சி குளிருமா? அழுவணம் என்றால் கை சிவக்குமா?

1. Good words and no deeds are rushes and reeds.
2. Wishes can never fill a sack.

1. அப்பன் சோற்றுக்கு அழுகிறான் பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்.
2. தனக்கு மிஞ்சி தருமம்.

Charity begins at home, but should not end there.

அவசாரியிலே வந்தது பெருவாரியிலே போகிறது.

1. Ill got, ill spent.
2. Like come, like go.

அழுத பிள்ளை பால் குடிக்கும்.

Ask and it shall be given. 15

அப்பியாசம் கூசா வித்தை.

Practice makes perfect.

1. அவன் வம்புக்கும், இவன் தும்புக்கும் சரி.
2. அடிக்கும் பிடிக்கும் சரி.
3. செட்டிப் பணத்தைக் குறைத்தான், சேணியன் நூலைக் குறைத்தான்.

1. To give one tit for tat.
2. To give one a kick for a cuff.

1. அளகேசனானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.
2. வரவுக்குத் தக்க செலவு.
3. விரலுக்குத் தக்க வீக்கம்.

Cut your coat according to the cloth.

அடாது செய்தவர் படாது படுவர்.

Do evil and look for like.

அத்தை மகளானாலும் சும்மா வருமா?

No sweet without sweat. 20

அகத்தினழகு முகத்தில் தெரியும்.

1. Face is the index of the mind.
2. A blythe heart makes a blooming visage.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

1. Too much of anything is good for nothing.
2. Excess of delight palls the appetite.
3. Surfeits slay more than swords.

1. அடி உதவுகிறதுபோல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்.
2. அடியாத மாடு படியாது.
3. கோல் ஆடக் குரங்காடும்.

1. Spare the rod and spoil the child.
2. A whip for a fool and a rod for a school is always in good season.

அவிவேகி உறவிலும் விவேகிபகையே நன்று.

A friend's frown is better than a fool's smile.

அறப்படித்தவன் அங்காடிபோனால் விற்கவுமாட்டான் கொள்ளவுமாட்டான்.

Experience without learning is better than learning without experience. 25

1. அடி என்று அழைக்க பெண்டாட்டி இல்லை பிள்ளை எத்தனை பெண் எத்தனை! என்கிறான்.
2. பருத்திக்காடு உழுகிறதற்கு முன்னே எனக்கு ஒரு துப்பட்டி உனக்கு ஒரு துப்பட்டியா?

Count not the chickens before they are hatched

அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டது போல்.

Never quit certainty for hope.

1. அம்மண தேசத்தில் கோமணம் கட்டினவன் பைத்தியக்காரன்.
2. தேசத்தோடொத்துவாழ்.

When you are in Rome do as the Romans do.

அறிந்த பார்ப்பான் சிநேகிதன் ஆறுகாசுக்கு மூன்று தோசை.

Trade knows neither friends nor kindred.

1. அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்.
2. சண்ணாலே சிவன் கடகடவென்று போனாலும் வண்ணான் கழுதை சுமந்தே தீரவேண்டும்.

What cannot be cured must be endured. 30

அன்னநடை நடக்கப்போய் தன் நடையும் கெட்டதுபோல்

Apes are never more beasts, than when they wear men's clothes.

அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் பயன்படாது.

Mother's darlings make but milk-sop heroes.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

All covet, all lose.

அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?

Bend the tree while it is twig.

அங்குமிருப்பான் இங்குமிருப்பான் ஆக்கின சோற்றுக்கு பங்குமிருப்பான்.

Like a dog in a fair; here, there, everywhere. 35

அற்பனுக்கு பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.

The higher the ape goes, the more he shows his tail.

அவன் பேசுகிறதெல்லாம் தில்லும் பில்லும் திருவாதிரை.

தில்லும் பில்லும் திருவாதிரை=tricks, deceptions.

He lies as fast as a horse can trot.

அன்பு இருந்தால் ஆகாதது ஆகும்.

He, that hath love in his breast, hath spurs at his heels.

அஷ்டமத்துச் சனியை விலைக்கு வாங்கினதுபோல்.

He, that courts injury, will obtain it.

அம்மா தெருளுவதற்கு முன்னே ஐயா உருளுவார்.

A young wife is an old man's post-horse to the grave. 40

அடக்கத்துப் பெண்களுக்கு அழகு ஏன்?

Beuty in woman is like a flower in spring; but virtue is the star in heaven.

அறியாப் பிள்ளையானாலும் ஆடுவார் மூப்பு.
Grey head on green shoulders.

அவசரத்தில் குண்டுசட்டியில் கை நுழையாது.
1. More haste, less speed.
2. Good and quickly seldom meet.

அன்னம் இட்டாரை கன்னம் இடலாமா?
I taught you to swim and now you would drown me.

அவன் வால் அறுந்து போச்சுது.
His comb has been cut. 45

அரைக்கரசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வராது
What is done can't be undone.

1. ஆண்மையற்ற வீரன்ஆயுதத்தின்மேல் குறைசொல்வான்.
2. ஆடமாட்டாத தேவடியாள் கூடம் போதாதுஎன்பாள்.
A bad workman quarrels with his tools.

ஆனைக்கும் அடி சரக்கும்.
Good Homer sometimes nods.

ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
1. Death keeps no calender.
2. Death does not blow a trumpet.

ஆறு கடக்கிறவரைக்கும் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீயார் நானார்.
The danger past, and God forgotten. 50

ஆயிரத்திலே பிறந்து ஐந்நூற்றிலே கால் நீட்டினதுபோல்.
To be born with a silver spoon in his mouth.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பப் பூ சர்க்கரை
Among the blind one eyed is the prince.

ஆண்டி மடம் கட்டுகிறதுபோல்.
A deluge of words and a drop of sense.

ஆபத்திலே சிநேகிதனை அறி.
A friend in need is a friend indeed.

ஆல் போல் விழுதுவிட்டு, அறுகுபோல் வேர் ஓடி மூங்
கில்போல் சுற்றும் முசியாமல் வாழ்ந்திருப்பீர்கள்.

(blessings.)

"Happy man and beauteous bride.
Be this place your home of pride!
Loving man and dutious wife,
In peaceful union pass your life!
May prattling children fill your home with
peace,
And lisping babes their grand-sire's bliss in-
crease!" 55

Dutt. "Lays of Ancient India."

ஆண்டியைக் கண்டால் லிங்கன் என்கிறான், தாதனைக் கண்
டால் ரங்கன் என்கிறான்.
லிங்கன்=A saivite mendicant.
ரங்கன்=A vaishnavite mendicant.
He hath a cloak for his knavery.

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
To have an eye in the main chance.

ஆழம் தெரியாமல் காலை இட்டுக்கொண்டேன்.
A danger foreseen is half avoided.

ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.
Better one virtuous son than even a hundred fools.

ஆப்பைப் பிடுங்கின குரங்குபோல் ஆனேன்.
He brings a staff to break his own head. 60

ஆகும் காலம் வந்தால் தேங்காய்க்கு இளநீர் சேர்வது போல் சேரும்
When God wills, all winds bring rain.

ஆகும் காலம் ஆகும் போகும் காலம் போகும்.
Joy and sorrow are next door neighbours.

ஆறுகாதம் என்கிறபோதே கோவணத்தை அவிழ்த்து குடுமியிலே கட்டிக்கொண்டானாம்.
Do not strip before bed time.

ஆடி ஓய்ந்த பம்பரம்போல் நின்றான்.
His heart went into his boots.

ஆளைப் பார்த்து ஏமாத்துமாம் ஆலங்காட்டுப் பேய்.
An easy fool is a knave's tool. 65

ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
The purpose of today, tomorrow wrests away.

1. ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக்கடவன்.
2 பகுத்தறியாமல் துணியாதே, படபடப்பாகச் செய்யாதே.
3. கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்க்கவேண்டும்.
Look before you leap for snakes among sweet flowers do creep.

ஆடி ஓடி நாடியிலடங்கிற்று.
After a storm comes a calm.

1. ஆனை வரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே,
2. கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே,
3. விநாசகாலே விபரீத புத்தி.

1. Coming events cast their shadows.
2. Pride goeth before destruction.

ஆபத்துக்குப் பாவமில்லை.
ஏண்டா! பட்டப்பகலிலே திருடுகிறாய்? என் அவசரம் உனக்கு தெரியுமா?

1. Necessity has no law.
2. Necessity dispenses with decorum. 70

ஆதாயமில்லாத செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானா?
Pain is forgotten where gain comes.

ஆலசியம் அமிர்தம் விஷம்.
Delay is dangerous.

ஆசை யிருக்கிறது தாசில் பண்ண, அமிசையிருக்கிறது கழுதை மேய்க்க.
If wishes were thrushes beggars would eat birds.

ஆடு நனைகிறதென்று கோனாய் அழுகிறதாம்.
Beware of the geese when the fox preaches.

ஆனை செத்தாலும் ஆயிரம்பொன் இருந்தாலும் ஆயிரம் பொன்.
A lion's skin is never cheap. 75

ஆசைக்கு அளவில்லை.
Ever drunk, ever dry.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.
A hasty man never wants woe.

ஆர் வாழ்வு ஆருக்கு நின்றது.

Today stately and brave, tomorrow in the grave.

ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள், தொண்ணூறு நாளும் போனால் துடைப்பக்கட்டை

"Mother, what sort of a thing is marriage?

Dangher, It is spinning, bearing children and weeping."

61. இளைத்தவன் பெண்டாட்டி எல்லாருக்கும் மைத்துனி.

A low hedge is easily leaped over. 80

இலைமறைவு காய் மறைவு வேண்டாமா?

To tell our secret is folly; to divulge the secret of others is treachery.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா?

He looks as if butter would not melt in his mouth.

இராவண சந்நியாசிபோலிருக்கிறான்.

(ie) a hypocrite

An artful fellow is a devil in a doublet.

இலங்கணம் பரம ஔஷதம்.

1. The best physicians are Dr. Diet.

Dr. Quiet and Dr. Merryman.

2. Feed sparingly and defy the physician.

இடுகிறவள் தன்னவளானால், அடிப்பந்தியில் இருந்தால் என்ன, கடைப்பந்தியில் இருந்தால் என்ன?

A friend in court makes a process short. 85

இரண்டு ஆட்டிலே ஊட்டின குட்டி ஆனான்.

No man can serve two masters.

இளமையில் முயற்சி முதுமையில் கார்க்கும்.

He, that saveth his dinner, will have the more for his supper.

இனத்தோடினஞ் சேரும்.

Birds of a feather flock together.

இராஜன் மெச்சினது ரம்பை.

1. Fair is not fair, but that which pleaseth.
2. Fancy surpasses beauty.

இரண்டு வீட்டிலும் கலியாணம், இடையில் செத்த தாம் நாய்குட்டி.

He, that haunts two hares, oft loseth both. 90

இட்டதெல்லாம் கொள்ளும் பட்டிமகன் கப்பறை.
(ie) never satisfied.

A beggar's purse is bottomless,

இட்டாருக்கு இட்டபலன்.

Give, and it shall be given unto you (Luc 6, 38,)

இட்டதில் ஒன்றும் குறையாது.

To a good spender God is treasurer.

இறைக்க இறைக்கக் கிணறு சுரக்கும்

Give and spend and God will send.

இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?

The comforter's head never aches. 95

ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்குகிறான்.

He makes a mountain of a mole-hill.

ஈட்டி எட்டினமட்டும் பாயும், பணம் பாதாளமட்டும் பாயும்.

Money is a sword that can cut even the Gordian-Knot.

Gordian Knot = intricate, complicated.

ஈனருக்கு இடம் கொடுத்தால் இல்லிடம் பாழ்.

He, that takes the devil into his boat, must carry him over the sound.

உனக்கும் பே பே, உன் அப்பனுக்கும் பே பே.

He falls into the pit, who leads another into it.

உலோபிக்கு இருச் செலவு.

A stingy man is always poor. 100

உடல் ஒருவனுக்குப் பிறந்தது, நாவு பலருக்குப் பிறந்தது.

Birds are entangled by their feet, and men by their tongues.

உதட்டிலே உறவும் நெஞ்சிலே பகையும்.

Bees, that have honey in their mouths, have stings in their tails.

உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

As clear as a crystal.

உள்ளே வயிறெரிய உதடு பழஞ்சொரிய.

A honey tongue, a heart of gall.

உள்ளே பார்த்தால் ஒக்காளம் வெளியே பார்த்தால் மேல் டம்பம்.

1. A clean glove often hides a dirty hand. 105

உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்.
Truth may be blamed, but not ashamed.

உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.
A fault confessed is half redressed.

உன் காலை நீயே கும்பிட்டுக்கொள்ளாதே.
Never blow the trumpet of your own praise.

உள்ளதுங் கெட்டதடா நொள்ளைக்கண்ணா.
To go out for wool and come home shorn.

உண்டவீட்டில் இரண்டகம் பண்ணலாமா ?
Mud not the fountain that gave drink to thee. 110

உபகாரத்துக்கு அபகாரம் வருகிறது துரதிஷ்டம்.
Hell is full of the ungrateful.

உதாரிக்குப் பொன் துரும்பு.
The charitable give out of the door, and God puts it in at the window.

உதைத்தக்கால் புழுக்கிறபோதல்லவோ புழுக்கும்.
Vengeance belongeth to me saith the Lord.

உருட்டப் புரட்ட உள்ளதும் உள்ளுக்குவாங்கும்.
Ill sowers make ill harvest.

உடல் சிறியராவரோ வென்றிருக்கவேண்டாம்.
A little body often harbours a great soul. 115

உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்து எண்ணும் மனம்.

Had you the world on your chess-board, you could not fit all to your mind.

ஊற்றவாயன் தேட நல்லவாயன் தின்ன.
Happy is the child whose father went to the devil

ஊணற்றபோதே உறவற்றது.
Want makes strife betwixt man and wife.

ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பண்டம்.
Better a bare foot than no foot at all.

ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்.
To cut large thongs of another man's leather. 120

ஊருக்கு ஒரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்.
Better master with one than engage with ten.

ஊர் நல்லதோ வாய் நல்லதோ.
All doors open to courtesy.

ஊர் எல்லாம் வாழுகிறதென்று வீடெல்லாம் அழுது புரண்டாலும் வருமா?
Malice drinketh its own poison.

ஊர் என்றிருந்தால் சேரியுமிருக்கும்.
It is in courts as it is in ponds, some figs, some frogs.

ஊசல் ஆடி தன் நிலையில் நிற்கும்.
Blow the wind ever so fast, it will lower at last. 125

எல்லாத் தலையிலே எட்டெழுத்து என் பாவித் தலையிலே பத்தெழுத்து.
Every horse thinks his own pack heaviest.

எலும்பில்லா நாக்கு எல்லாம் பேசும்.
The tongue breaketh bone and itself hath none.

எறும்பூரக் கல் தேயும்.
Constant dropping wears the stone.

C1824
N28
175445

எல்லாரும் பல்லக்கு ஏறினால் பல்லக்குத் தூக்குகிறதுயார்?
I proud, thou proud, who shall bear the ashes out?

என்னைப்போல குரலும் என் அக்காளைப் போல ஒயிலும் இல்லை என்கிறதாம் கழுதை.
Every ass loves to hear himself bray. 130

எழுத வழங்காத வாழ்வு கழுதை புரண்டகளம்.
Better unborn than untaught.

எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய், உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்.
What's yours is mine and what's mine is my own.

எட்டினால் குடுமியைப் பிடி எட்டாவிட்டால் காலைப்பிடி.
When you are a hammer strike your fill,
When you are an anvil hold you still.

எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்தில்லாதவர் கழுத்தில்லாதவர்.
Learning is the eye of the mind.

எடுக்கிறது சந்தைகோபாலம், ஏறுகிறது தந்தபல்லக்கா?
A proud mind and a poor purse are ill met. 135

1. எரிகிற வீட்டில் பிடுங்குகிறது லாபம்.
2. சந்தடி சாக்கிலே சந்தபொடி காற்பணம்.

It is good fishing in troubled waters.

எண்பது வேண்டாம், ஐம்பதும் முப்பதும் கொடு.
It's six of one, and half a dozen of the other.

எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
East or West, home is best.

எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமல் செய்கிறவன் மட்டி.

Consideration is the parent of wisdom.

எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளினது போல்.

Adding fuel to the fire. 140

எதை அடக்காவிட்டாலும் நாவை அடக்கவேண்டும்.

Put to your tongue a bridle, that it talks not idle.

1. எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்.
2. ஒண்டிமரம் தோப்பாமா?
3. ஒரு கைதட்டினால் ஓசை கிளம்புமா?

1. Union is strength.
2. One flower makes no garland.

ஏழை அழுத கண்ணீர் கூரியவாளை ஒக்கும்.

Tread on a worm and it will turn.

1. எட்டுச் சுரைக்காய் கரிக்காகுமா?
2. சொற்பனங் கண்ட அரிசி சோற்றுக்காகுமா?
3. சக்கரை என்றால் தித்திக்குமா?

1. Wishes can never fill a sack.
2. Wine in the bottle doeth not quench the thirst.

ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.

Poorman's words have little weight. 145

ஏடாக்கூடம் பேசினால் அகப்பை சூனியம் வைப்பேன்.

I will take you down a peg if you talk absurd.

ஐயர் வருகிறவரைக்கும் அமாவாசைக் கார்க்குமா?

Time and tide wait for no man.

ஒப்பாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்கிறதாம் ஈரும் பேனும்.

A fair exterior and a foul interior.

ஒரு காசு பேணில் இருகாசு தேரும்.

Take care of pence, the pounds will take care of themselves.

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்

A lie begets a lie, till they come to generations. 150

ஒரு முழுக்கிலே மண் எடுக்கிறதா?

Rome was not built in a day.

ஒரு நாள் கூத்துக்கு மீசை சரைக்கிறதா?

The game is not worth the candle.

ஒருவன் அறிந்தால் ரகசியம் இரண்டுபேர் அறிந்தால் அம்பலம்.

Three may keep counsel, if two be away

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாப்பாள் போட்டது போல்.

This is used when a person is displeased with or sorrow for something that has happened and some-body tries to soothe him, but only succeeds in irritating him still more.

As water in a smith's forge, that serves rather to kindle than quench.

ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரியை ஒட்டினதுபோல்.

I gave the mouse a hole and she is become my heir. 155

ஒன்று ஒன்றாய் நூறா? ஒருமிக்க நூறா?

Drop by drop the lake is drained.

ஓட்டை நாழிக்கு பூண் கட்டுவதுபோல்.
A leaden sword in an ivory scabbard.

ஓரைக்கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக்கண்ணன்.
The pot calls the kettle black.

ஓட்டைச்சட்டியானாலும் கொழுக்கட்டை வேகிறது ஒன்று
All is well, that ends well.

ஓடிப்போன முசல் பெரிய முசல்.

(ie) The loss of anything makes it precious.

He, that boasteth of his ancestors, confesseth he hath no virtne of his own. 160

கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும்.

1. A thrust paid for is better than a turkey owing for.
2. Sleep without supping and wake without owing.

கணக்கன் கணக்கறிவான், தன் கணக்கைத் தான் அறியான்.
A what-stone, though can't itself cut, makes tools cut.

கல்வி கற்கிறதைவிட தன் கருத்து ஆராய்கிறதுநன்மை.
A handful of good life is better than a bushel of learning.

கல்வி என்ற பயிருக்கு கண்ணீர் என்ற மழை வேண்டும்.
The rain of tears is necessary to the harvest of learning.

கனவில் கண்ட பொருள் கைக்கெட்டுமோ?
If wishes were horses, beggars would ride.

கடுஞ்சினம் கண்ணுக்குப் பொல்லாப்பு.
Hot love is soon cold. 165

கண்கெட்டபிறகா சூரிய நமஸ்காரம்.

'Tis too late to spare, when the bottom is bare.

1. கழுதைக்குத் தெரியுமா கந்தபொடி வாசனை ?
2. குங்குமம் சுமந்த கழுதை பரிமணம் அறியுமா ?

To throw pearls before swine

கல்லைக் குத்துவானேன் கை நோகு தென்பானேன்.

Who never climbed never fell.

1. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தது போல்.
2. ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே.

Rob Peter pay Paul.

கல்லிலே நார் உரிப்பது போல்.

(*ie*) said of one who knows how to get money from a stingy man.

He 'll flay a flint. 170

1. கறந்தபால் கறந்தபடியே பேசு.
2. சத்தியமே சத்தி, தத்துவமே சித்தி.

1. Honesty is the best policy.
2. Craft must have clothes, but truth loves to go naked.

கசடான கல்வியினும் கல்வியீனம் நலம்.

Better untaught than illtaught.

கடுகுபோகிற இடத்தில் தடி எடுத்துக்கொண்டு திரிவான் பூசினிக்காய் போகிற இடம் தெரியாது.

Penny wise, pound foolish.

கழுதை புட்டை கை நிறைய.

A bellyful is a bellyful whether it meat or drink.

கட்டின வீட்டுக்கு நோட்டம் சொல்வார் அநேகர்.

Of judgement every one has a stock for sale. 175

கரும்பு ருசிக்குதென்று வேரோடு பிடுங்கலாமா?

Milk the cow but don't pull off the udder.

கண்டும் காணவில்லை என்றும், கேட்டும் கேட்கவில்லை என்றும் இருக்கவேண்டும்.

There is a time to wink as well as to see.

கண்டதைக்கொண்டு காலைவாரி அடிக்கிறது.

(*se*) Said of one who deceives others by good words.

In the fair tale is foul falsity.

கப்பல் ஓடிப்பட்ட கடன் கொட்டை நூற்றுமுடியும.

A drop in the ocean.

கலப்பானுக்கு துளிப்பிரை.

A little leaven leaveneth the whole lump. 180

கல்லைக்கண்டால் நாயைக்காணோம் நாயைக்கண்டால் கல்லைக்காணோம்.

All is not at hand that helps.

கண்டால் முறை சொல்லுகிறது காணாவிட்டால் பேர் சொல்லுகிறது.

He, who praises in presentia and abuses in absentia has with him pestilentia.

கனத்திற்கு நற்குணம் சுமைதாங்கி.

From our ancesters come our names, but from our virtue our honours.

கலத்தில் சோற்றை இட்டுக் கையைப் பிடித்தாப்போல்.
(*ie*) to promise and afterwards disappoint.
Give a thing and take again, and you shall ride in hell's wain.

காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே.
A thousand pounds and a bottle of hay, are just the same at dooms-day. 185

காசிக்குப் போனாலும் கர்மம் தொலையவில்லை.
He, who goes a beast to Rome, a beast returns.

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.
Every cook praises his own broth.

காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும்.
Time and words can never be recalled.

1. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்
2. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.

The wearer best knows where the shoe pinches.

காலைச் செம்மானம் காலத்திலும் மழை இல்லை, அந்திச் செம்மானம் அப்பொழுதே மழை.
An evening red and a morning grey is a sign of a fair day. 190

காராம்பசுவுக்குப் புல் வெட்டினால் போலும், நந்தவனத்திற்கு களை வெட்டினால் போலும், தம்பிக்கு பெண் பார்த்தால் போலும்.
1. To catch two pigeons with one bean.
2. To make two friends with one gift.

காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் அடித்துக்கொண்டு போனான்.

One beats the bush, another catcheth the bird.

1. காது காது என்றால் செவிடு செவிடு என்கிறாய்.
2. பட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால் கொட்டைப் பாக்கு பத்து பணம் என்கிறாய்.

I talk of chalk and you of cheese.

காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்.

A little negleet may breed endless mischief.

காட்டில் எரித்த நிலாவும் கானலிற் பெய்த மழையும் வீண்.

He sprinkles incense on a dung-hill. 195

காடு வாவா என்கிறது வீடு போபோ என்கிறது.

1. He is burnt to the socket.
2. His candle burns within the socket.

காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலனடைவான்.

1. Keep they shop and thy shop will keep thee.
2. Long looked-for comes at last.

காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது.

A wonded reputation is seldom cured.

காசுக்கு ஒரு புடவை விற்றாலும் நாயின் சூத்து அம்மணம்.

If it should rain porridge, he would want his dish.

காமத்துக்குக் கண் இல்லை.

Love is blind. 200

கிளி பிடித்ததோ, புலி பிடித்ததோ?

A man surprised is half beaten.

கிட்டவா நாயே என்றால் மூஞ்சியை நக்குகிறது.

1. Jest with an ass and he will flap you in the face with his tail.
2. The dog wags its tail not for love of you, but of your bread.

கிழிஞ்சாம்பிள்ளை மணியத்தில் நீட்டினது சட்டம்

(*ie*) said of officials who will not allow their doings to be critisised.

Accusing is proving where malice and force sit judges.

கிழவியும் காதம், குதிரையும் காதம்.

God knows well which are the best pilgrims.

குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்.

Be it better or be it worse, be ruled by him that bears the purse. 205

குப்புற விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்கிறார்.

There is no such flatterer as a man's self.

குட்டிக்கலகம் பண்ணுகிறவன் குட்டுப்பட்டுச் சாவான்.

Where vice is, vengeance follows.

குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை.

Deem the best of every doubt, till the truth be tried out.

குன்றிமணிக்கும் குன்றியில் கறுப்பு.

No rose without a thorn.

குலைக்கிற நாய் வேட்டை பிடிக்காது.

Barking dogs seldom bite. 210

குறையச் சொல்லி நிறைய அள.
Cheat me in the price, but not in the goods.

குடிக்கிற வீடு விடியாது.
Wine and wenches empty men's purses.

குப்பையிலிருந்தாலும் குன்றிமணி குன்றிமணியே.
A myrtle among thorns is a myrtle still.

குடியிருந்த வீட்டில் கொள்ளிவைக்கிறவன்.
(*ie*) said of one who betrays his benefactor.
Anoint a clown and he will grip you.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறென்றும் (கூடிவாழ் சத்துரு)
A guilty conscience needs no accuser. 215

குடலைப் பிடுங்கி பூணூல் போட்டுக்கொள்வேன்.
(*ie*) said of one who boasts of his inhuman actions.
I could eat your heart with garlic.

குசவனுக்குப் பலநாள் வேலை தடிக்காரனுக்கு ஒருநாள் வேலை.
An hour may destroy what an age has built up.

கூடிப் பிரியேல்.
A reconciled friend is a double enemy.

கூட்டம் பெருத்தால் குசுப்பெருக்கும்.
Too many cooks spoil the broth.

கூத்தரிசி குத்துகிற வீட்டில் வாய்க்கரிசிக்கு வழி இராது.
The tailor's wife is worst clad. 220

கூத்திக்கிட்டு குரங்கானேன் வேசிக்கிட்டு விரகானேன்.
An ill life, an ill end.

கூத்துக் கேத்த பந்தம் பிடிக்கிறான்.
He has a saddle for every horse.

கூழ் குடித்தாலும் குட்டாய் குடிக்கவேண்டும்.
He is a wise man that can wear poverty decently.

கூடக்குடி இருந்துக்கொண்டு கொள்ளிவைக்கலாமா ?
Ingratitude is the daughter of pride.

கெட்டவன் கங்கை ஆடினாலும் பாவம் தீருமா ?
If we be enemies to ourselves, wither shall we fly? 225

கெண்டையைப்போட்டு விராலை இழுக்கிறது.
Throw in a sprat and catch a salmon.

1. கெலிப்பும் தோப்பும் ஒருவர் பங்கல்ல.
2. சுகதுக்கம் சுழல் சக்கரம்
Change of fortune is the lot of life.

கெரடி கற்றவன், இரடி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை.
All things, that great men do, are well done.

கெட்டுப்போன பார்ப்பானுக்குச் செத்துப்போன பசு தானம் கொடுப்பதுபோல்.
A scabbed horse is good enough for a scabbed knight.

கெடுவான் கேடு நினைப்பான்.
They hurt themselves that wrong others. 230

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
1. Punishment though lame, yet overtakes the sinner at last.
2. A liar must have a good memory.

கேள்விமுயல்.
He, that questioneth, nothing learneth.

1. கேட்டிலுறுதி கூட்டுமுடைமை.
2. கோடான கோடி வினைவரினும் மனம் கோணாமலிருப்பதே கோடிபெறும்.

Calamity is the touchstone of the brave mind.

கைப்பொருளற்றால் கட்டுக்கழுத்தியும் பாராள்.

When poverty comes in at the door love leaps out at the window.

கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்.

Keep a dog and bırk myself ? 235

கையில் ஜெபமாலை கக்கத்தில் கன்னக்கோல்.

Hyprocrisy can find out a cloak for every rain.

கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை.

Many a slip 'twixt the cup and the lip.

கைமூடிக்கொண்டிருந்தால் கமுக்கும், திறந்தால் வெட்டவெளி.

1. It is an ill bird that fouls its own nest.
2 Decency and decorum are not pride.

கைப்பொருள் தன்னிலும் மெய்ப்பொருள் கல்வி.

Learning is an ornament in prosperity, a refuge in adversity and a possession in old age.

கொட்டினாலும் தேள் கொட்டாவிட்டாலும் பிள்ளைப்பூச்சு.

Of small account is a fly till it gets into your eye. 240

கொள் என்றால் வாயைத்திறக்கிறது, கடிவாளமென்றால் வாயை மூடுகிறதா?

To puake at work and sweet at meals.

கொஞ்சம் இடம்கொடுத்தால் கோட்டைக்கு இடம் கேட்பான்.

Give him an inch and he will take an ell.

கொல்லுகிறதும் சோறு பிழைப்பிக்கிறதும் சோறு.

Men die more by food than famine.

கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.

A good man will request a gift, an ill man will ask more.

கொடுத்து நிஷ்டூரம்படுவதைவிட கொடாமல் நிஷ்டூரம் படுவது மேல்.

He, that trusteth not, is not deceived. 245

கொஞ்சம் கொஞ்சம் தின்றால், பனையும் தின்றுவிடலாம்.

Constant application overcomes greatest difficulties.

கொடுத்தது கேட்டால் அடுத்திடும் பகை.

Sweet is the wine, but sour is the payment.

கொல்லன் தெருவில் ஊசி விற்றதுபோல்.

To carry coals to Newcastle.

கோணிகோடி கொடுப்பதிலும் கோணாமல் காணி கொடுப்பது போதும்.

A gift with a kind countenance is a double present.

கோடி நேசம் கேடுபடுத்தும்.

A friend to everybody is a friend to nobody. 250

கோடி வித்தையும் கூழுக்கு.

The belly teaches all arts.

கோயில் பூனை தேவருக்கு அஞ்சுமா?
The nearer the Church the farther from God.

கோபம் சண்டாளம்.
Anger is a sworn enemy.

கோழி திருடியும் கூடிக்குலாவுகிறாள்.
She wears two faces under one hat.

1. சட்டியில் இருக்கிறதுதான் அகப்பையில் வரும்.
2. உண்டதுதானே ஏப்பம் வரும்.

What the heart thinketh the tongue speaketh. 255

1. சட்டிப் பாலுக்கு ஒரு சொட்டுமோர் பிரை.
2. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

A rotten sheep infects the whole flock.

சம்பளம் அரைப்பணமானாலும் சளுக்கு முக்கால்பணம்.
The devil wipes his tail with the poor man's pride.

சாதுமிரண்டால் காடு கொள்ளாது.
Nothing turns sourer than milk.

சாராயத்தைக் கொடுத்துப் பூராயத்தைக் கேள்.
When the wine is in, the wit is out.

சாமி காட்டும்; ஊட்டுமா?
God helps those that help themselves. 260

சாண் ஏற முழம் சறுக்கும்.
One step forward and two steps back.

சாட்டி அடியும் சவுக்கு அடியும் பொறுக்கலாம், மோட்டுப் பூச்சிக்கடியும் முணு முணுப்பும் ஆகாது.
No cut like unkindness.

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழலாம்.

1. Agree, for the law is costly.
2. An indifferent agreement is better than carrying a cause at law.

சிட்டுக்குருவிமேல் ராமபாணம் தொடுக்கிறதா?

Take not a musket to kill a butterfly.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

1. Apelles was not a master painter the first day.
2. Practice makes perfect.
3. All things are difficult before they are easy. 265

சிந்தின வீட்டிலே சோரது மங்கின வீட்டிலே வாராது.

He, that will not stoop for a pin, will never be worth a point.

சிரித்து சிரித்து கழுத்தை அறுக்கிறது.

1. You smile and bite.
2. A snake in the grass.

சிறுபோது படியாதகல்வி அழுக்குச் சேலையில் சாயம் ஒற்றினதுபோல்.

Youth and white paper take any impression.

•சுவாமியாருக்கு சுவாமி வேண்டும்.

To a hard knot a hard wedge.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.

A good horse often wants a good spur. 270

சும்மா கிடைக்குமா சோணாசலப் பாதம்.
1. Think of case, but work on.
2. The gods sell us everything for our labours.
3. The best things are worst to come by.

சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு,
A stout heart crushes ill-luck.

சூடுண்ட பூனை அடுப்பண்டை வராது.
1. A burnt child dreads the fire.

சூதும் வாதும் வேதனை செய்யும்.
Frost and fraud have foul ends.

செத்தவன் வீட்டிலே கெட்டவன் யார்?
(*ie*) said of one who is liberal with the property of others.
To cut large slices of another man's loaf. 275

1. சென்மத்தில் பிறந்தது செருப்பால் அடித்தாலும் போகாது.
2. நாய்வாலைக் குணக்கு எடுக்க முடியுமா?
Crooked by nature is never made straight by education.

செவிடன் காதிலே சங்கு ஊதினதுபோல்.
He, that will not be saved, needs no sermon.

செம்பால் அடித்த காசு கொடான்.
Money comes from him like drops of blood.

சென்ற விடமெல்லாம் சிறப்பே கல்வி.
He, who has an art, has everywhere a part.

செய்த தீவினை செய்தவர்க்கே.
Harm watch, harm catch, 280

செல்வம் சகடக்கால்போல வரும்.

Riches have wings.

ஜெயமுள்ளவரைக்கும் பயமில்லை.

A successful man loses no reputation.

ஜல்வித்தை காட்டுகிறேன் பராக்கில்லாமல் பார் என்கிறாய்.

Stuffing is good for geese, but not for me.

சேர இருந்தால் செடியும் பகை, அகல இருந்தால் நிகள உறவு.

1. Friends agree best at a distance.
2. A hedge between keeps friendship green.

சேமம் புகினுஞ் சாமத்துறங்கு.

One hour's sleep before midnight is worth two hour's after. 285

சேராத இடத்தில் சேர்ந்தால் வாராத சொட்டுவரும்.

Well may he stumble that chooses a stony way.

1. சொல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது.
2. காற்றில்லாமல் தூசு பறக்குமா ?
1. No smoke without fire.
2. Every why has a wherefore.

சொல்லிக் கொடுத்தச் சொல்லும் கட்டிக்கொடுத்தச் சோறும் எதுவரையில் நிற்கும்.

An ounce of wit that is bought is worth a pound that is taught.

சொல்வது யார்க்கும் எளிது, அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்.

Exampie is better than precept.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
Lip-wisdom wanteth experience. 290

சோற்றுக்குக் கேடு பூமிக்குப் பாரம்.
He is not worth his salt.

ஞாபகமில்லை என்று எவனும் சொல்வான், ஞானமில்லை என்று எவனும் சொல்லான்.
All complain of want of memory, but none of want of judgment.

டில்லிக்குப் பாட்சாவானாலும், தல்லிக்குப்பிட்டா.
Alexander himself was once a crying babe.

தன் குற்றம் இருக்க பிறர் குற்றம் பார்க்கிறதா?
Those, who live in glass houses, should not throw stones upon others.

தங்கமெல்லாம் தவிட்டுக்கு மாறுகிறது.
1. Today in fancy tomorrow in filth.
2. The highest spoke in Fortune's wheel may soon turn lowest. 295

தம்பி கால்நடை பேச்சு பல்லக்கிலே.
Great cry and little wool.

தலையைத் தடவி மூளையை உரிவான்.
He covers me with his wings and bites me with his bill.

தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பிச் சண்டப் பிரசண்டன்.
When the cat is away, the mice will play.

தன் குற்றம் கண்ணுக்குத் தோன்றாது.

Men's years and their faults are always more than they are willing to own.

தன் முதுகு தனக்கு தெரியாது.

If the camel could see his hump, he would fall down and break his neck. 300

தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.

To err is human, to forgive is devine.

தனக்கென்றிருந்தால் சமயத்துக்குதவும்.

Better buy than borrow.

தன் தப்பு பிறர்க்குச் சந்து.

The vulgur keeps no accounts of your hits, but of your misses.

தலை இருக்கிற இடத்தில் கழுத்து வரட்டும்.

(*ie*) you are still young.

You must eat another yard of pudding first.

தன்னைப் புகழ்வானும் சாணேறி நிற்பானும், பொன்னைப் புதைத்து வைப்பானும் பேய்.

1. Self exaltation is the devil's paradise.
2. The first chapter of fools is to esteem themselves wise. 305

தான் திருடி அசல்வீடு நம்பமாட்டாள், கூத்திக் கள்ளன் பெண்டாட்டியை நம்பான்.

Do well and doubt no man; do ill and doubt all men.

தான் குடிக்காத பாலை கவிழ்த்துவிடுகிறதா ?

(*ie*) neither will eat nor will allow cattle to cat.

He is a dog in the manger.

தாட்சணியம் தன நாசனம்.
Foolish pity spoils a city.

தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை.
As the old cock crows so crows the young.

தாரமும் குருவும் தலைவிதி.
Marriages are made in heaven. 310

தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.
1. Better bend tne neck than bruise the forehead.
2. The world is his who has patience.

தான் தேடாத பொருளுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை.
What costs little is little esteemed.

தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்.
A wilful man will have his oun way.

தான் அடங்க தன் குலம் விளங்க.
A Good Jack makes a good Jill.

தான் சாக மருந்து தின்பாருண்டா?
Life is sweet. 315

திருடனை ராசவிழி விழிக்கச் சொன்னால் விழிப்பானா?
Little things attract little mind.

திருடன் புகுந்த ஆறுமாதம் நாய் குலைத்தது போல்.
To lock the stable after the horse is stolen.

துள்ளுகிற மாடு பொதி சுமக்காது.
Great braggers little doeth.

துட்டு வந்து பெட்டியில் விழுந்ததோ, திட்டுவந்து பெட்டியில் விழுந்ததோ.
Account not that work slavery that brings in penny savory.

தூர்ந்த கிணற்றை தூர்வாராதே.

1. Let sleeping dogs lie.
2. Do not rake the gutters. 320

தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும்.

Men of cruelty are birds of the devils hatching.

தைரியலட்சுமி தனலட்சுமி.

1. Faint heart never won fair lady.
2. Nought venture, nought win.
3. He, that does not venture, must not complain of ill-luck.

தொட்டுப்பார்த்தால் தோட்டியும் உறவு, நாலாந்தலை முறை நாடிப் நாடிப்பார்த்தால் நாவிதனும் சிற்றப்பனாவான்.

When Adam delved and Eve span, who was then a gentleman?

தொன்மை நாடி நன்மை விடாதே.

In loving what is ancient (traditional) do not forsake what is good at present.

The olden age was never the present age.

தோட்டிப்போல் உழைத்து துரைபோல் சாப்பிடு.

Of sufferance comes ease. 325

தோழனோடு ஏழமைப் பேசேல்.

A man's folly ought to be his greatest secret.

நல்லது நாற் கலம் ஊத்தை ஒன்பது கலம்.

1. Good ware makes a good market.
2. Ill weeds grow apace.

நல்லார் பொல்லாரை நடக்கையால் அறியலாம்.
A tree is known by its fruit.

நல்ல மாட்டுக்கு ஒரு அடி நல்ல மனிதனுக்கு ஒரு சொல்.
A nod for a wise man and a rod for a fool.

நகத்தால் கிள்ளாததை கோடாலியால் வெட்ட நேரிடும்.
Nip the briar in the bud. 330

நகமும் சதையும் போல இருக்கிறார்கள்.
They are hand and glove with.

நக்குகிற நாய்க்கு செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியுமா?
A pebble and a diamond are alike to a blind man.

நடந்தகாலிலே சீதேவி, இருந்தகாலிலே மூதேவி.
The early bird catcheth the worm.

நம்பவைத்துக் கழுத்தை அறுக்கலாமா?
To laugh in one's face and cut his throat.

நல்லாரை நாவிலுரை, பொன்னைக் கல்லிலுரை.
Speech is the picture of the mind. 335

1. நல்லகதை நீளமில்லை.
2. சுருங்கச் சொல்.
3. மிகைபடச் சொல்லேல்.

Brevity is the soul of wit.

நண்டை சுட்டு நரியைக் காவல் வைத்தது போல்.
You give the wolf the wether to keep.

நகமும் சதையும் போலிருந்து கழுத்தை அறுக்கிறது.
The fowler's pipe sounds sweet, till the bird is caught.

நாய்க்கு வேலையுமில்லை நிற்க நேரமுமில்லை.
Idle folks have the least leasure.

நாடின பொருள் கைகூடும்.
Seek and ye shall find. 340

நார் அறுந்தால் முடியலாம், நரம்பு அறுந்தால் முடியலாம், மனமறுந்தால் முடிய முடியாது.
Broken friendship may be soldered, but never made sound.

1. நாளைக்கு வரும் பலாக்காயைவிட இன்றைக்கிருக்கும் களாக்காயே மேல்.
2 கைப்பழத்தைக் கொடுத்துத் துறட்டிப் பழத்துக்கு அண்ணாந்து நிற்பானேன்.
A bird in tbe hand is worth two in the bush.

நாமம் போட்டவனெல்லாம் நாதனா, விபூதி பூசினவனெல்லாம் ஆண்டியா ?
1. All are not hunters that blow the horn.
2. Don't gudge the horse from the harness.

நிறைகுடம் நீர் தளும்பலில்.
Empty vessels make more noise.

நிருவாண தேசத்தில் நீர்ச்சிலை கட்டினவன் பைத்தியக்காரன்.
Where ignorance is bliss, it is folly to be wise. 345

நின்று போட்டதுமில்லை குனிந்து எடுத்ததுமில்லை.
Lightly come, lightly gone.

நீரைச் சிந்தினாயோ, சீரைச் சிந்தினாயோ ?
Of saving cometh having.

நீ சொல்லுகிறது நிசமானல் மூக்கினல் நாக்கைத் தொடு.
You say true; Will you swallow my knife?

நீலங் கட்டுப்பட பேசுகிருன்.
That is a lie with a witness.

நீலிக்கு கண்ணீர் நிமையிலே.
Woman laugh when they can and weep when they will. 350

நுனிமரத்தில் ஏறி அடிமரத்தை வெட்டினது போல்.
The fool hunts for misfortune.

நூற்றுக்கு ஒரு பேச்சு.
To hit the nail on the head.

நோயற்ற வாழ்வே வாழ்வு குறைவற்ற செல்வமே செல்வம்.
It is a fortunate head that never ached.

நோய்க்கிடங்கொடேல்.
Prevention is better than cure.

பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்.
Better be lucky born than a rich man's son. 355

பழகப் பழகப் பாலும் புளிக்கும்
Too mnch familiarity breeds contempt.

1. பலதுளி பெருவெள்ளம்.
2. ஆயிரம்மாகாணி அறுபத்திரண்டரை.
1. Many a little make a mickle.
2. A whole bushel of wheat is made up of single grains.
3. A pin a day is a grout a year.

பதமாய் சிநேகம் பண்ணவேண்டும்.

Friendship increases in visiting friends, but more in visiting them seldom.

பழைய குருடி கதவைத்திறடி.

(*it*) said of one who is ungrateful of his benefactor and speaks conceited.

The peril past, the saint mocked.

பசியாமல் வரந்தருகிறேன் பழங்கஞ்சி இருந்தால் வாரு.

His wit got wings and would have flown, but poverty still kept him down. 360

பள்ளம் இறைத்தவன் பங்குகொண்டுபோவான்.

He, who will have the fruit, must climb the tree.

பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா?

Like the smith's dog that sleeps at the noise of the hammer.

பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.

The old fox is caught at last.

பகலில் பக்கம் பார்த்துப் பேசு இரவில் அதுதானும் பேசாதே.

Hills see, walls hear.

பசித்தவன் பழங்கணக்குப் பார்த்தாற் போல்.

It is too late to spare when the bottom is bare. 365

பசித்தவன்மேல் நம்பிக்கை வையாதே.

A drowning man catches a straw.

பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிறது.

He is a wolf in a lamb's skin.

பசு விற்றால் கன்றுக்கு வழக்கா?
If you buy the cow, take the tail into the bargain?

பணம் உண்டானால் படையும் வெல்லலாம்.
1. Money is ace of trumps.
2. All things are obedient to money.

பந்திக்கு முந்தவேண்டும், படைக்கு பிந்தவேண்டும்.
First come, first served. 370

பணமில்லாதவன் பிணம்.
A man without money is a bow without an arrow.

பருவத்தே பயிர்செய்.
Early sow, early mow.

பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்.
Jack of all trades and master of none.

பன்னிப் பன்னிப் பழங்கதைப் பாடாதே.
To harp upon the same string.

பாடகக் காரியிடம் பாரதம் சொன்னால் பாடகத்தைப்
பார்ப்பாளா பாரதத்தைக் கேட்பாளா?
The full belly does not believe in hunger. 375

பாடில்லாமல் பயனில்லை.
No pains, no gains.

பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி.
A lamb at home and a lion at chase.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்.
To hold with the hare and run with the hound.

பால் குடித்தவனுக்கு பால் எப்பம், கள் குடித்தவனுக்கு கள் எப்பம்.

1. Out of the abundance of the heart, the mouth speaketh.
2. If better were within, better would come out.

பாம்பின் வாய்த் தேரை போல.

Like a lump of butter in a dog's mouth. 280

பாம்பும் கீரியும் போல.

They are at daggers drawn.

பாண்டவாள் தெரியாதா? கட்டில் கால் போல் மூன்று பேர் என்று வாயால் சொல்லி, இரண்டு விரலைக் காட்டி, நிலத்தில் ஒருகோடு எழுதினனும்.

He speaks one word nonsense, and two that have nothing in them.

பித்தனுக்கு தன் குணம் நூலினும் செவ்வை.

நூல்=A straight line.

Folly is wise in her own eyes.

பிள்ளை பெற்றுப் பேரிடவேண்டும்.

Never buy the cradle till the baby comes.

பிரியமில்லா சோறு பிண்டா சோறு:

Better a friendly denial than an unwilling compliance. 385

பிள்ளை பெறப் பெற ஆசை, பணம் சேரச் சேர ஆசை.

The more one has, the more one wants.

பிள்ளை வரத்துக்குப் போய் புருஷனை இழந்தது போல்.

The camel seeking horns lost its ears.

பிரசவ வைராக்கியம், புராண வைராக்கியம், மசான வைராக்கியம்.

1. The chamber of sickness is the chapel of devotion.
2. Vows made in storms are forgotten in calms.

பிள்ளையார் சதுர்த்திக்கும் மீராசாயபுக்கும் என்ன சம்பந்தம்

As much a kin as Lenson-hill and Pilsen-pin.

(These are two hills in Windsor.)

பிடிப் பிடியாய் நட்டால் பொதிப் பொதியாய் விளையுமா?

He, that grasps at too much, holds nothing fast. 390

பிள்ளையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறது.

Break my head and bring me a plaster.

பிண்டம் பெருங்காயம் அன்னம் கஸ்தூரி.

In ill years straw is corn.

புரட்டிப் புரட்டி உதைத்தாலும் மீசையில் மண்படவில்லை.

Though I am bitten, I am not all eaten.

புலி பதுங்குகிறது பாய்ச்சலுக்கடையாளம்.

A calm before a storm.

புண்ணிலே கோல் இட்டதுபோல்.

To add fuel to the fire. 395

புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்டதுபோல்

Barrowed garments never fit well.

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமெல்லாம் இருட்டென்று எண்ணிக் கொள்ளுமாம்.

1. As the fool thinks the bell clinks.
2. He is a fool that thinks not that another thinks.

பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.
What is one man's meat is another man's poison.

பூச்சி பூச்சி என்றால் புழுக்கை தலைமேல் ஏறும்.
(*ie*) servants when treated kindly take advantage.
He, that handles a nettle tenderly, is soonest stung.

பெண்டாட்டி கால்விலங்கு பிள்ளை சுள்ளாணி.
Wedlock is a padlock. 400

பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள், பெண்சாதி மடியைப் பார்ப்பாள்.
After the time of winning and bringing a wife's friend you are; but when you are tired and weary, a mother's son you are.

பெருமையும் சிறுமையும் தான்றரவருமே.
Every man is the architect of his own fortune.

பெருங்காயம் இருந்த பாண்டம் வாசனை போகாது.
Every tub smells of the wine it holds.

பேசினால் வாயாடி பேசாமல்போனால் ஊமைப் பயல்.
It is hard to please all parties.

பேசப்போனாயோ சாகப்போனாயோ!
A fool's tongue is long enough to cut his own throat. 405

பேச்சுக்கு ராவணன் பின்பு கும்பகர்ணன்.
The greatest talkers are always the least doers.

பொறுத்தார் பூமி ஆள்வார் பொங்கினார் காடாள்வார்.
1. Command yourself and you will command all things.
2. Bear and forbear is good philosophy.
3. Patience is the mother of virtue.

பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரியது.

Virtue is a jewel of great price.

பொன் குடத்திற்கு பொட்டிட்டு பார்க்கவேண்டுமா ?

Handsome is that handsome does.

பொய்யிருந்து புலம்பும் மெய்யிருந்து முழிக்கும்

Knaves are in such repute, that honest men are accounted fools. 410

பொய் மெய்யை வெல்லுமா ?

Truth is God's daughter.

போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து.

A contented mind is a continual feast.

போக்கிரிக்குப் போக்கிரி வேண்டும்.

1. To set a thief to catch a thief.
2. Devils must be driven out with devils.

மட்டான போஜனம் மனதுக்கு மகிழ்ச்சி.

Temperance is the best physic.

மண்டையுள்ளளவும் சளியுண்டு.

Life and misery began together. 415

மனோராச்சியம் பண்ணுதல்.

Building castles in the air.

1. மனமிருந்தால் மலையும் சாயும்,
2. வேணுமென்று நூற்றல் வெண்ணெய்கட்டிபோல் நூற்கலாம்.

A willing mind makes a light foot.

4-B
2-73

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
Welcome is the best cheer.

மயிலே மயிலே இறகு கொடு என்றால் கொடுக்குமா?
There is no argument like that of the stick.

மலையை நோண்டி எலியை பிடிக்கிறதா?
Sue a begger and catch a louse? 420

மனக்கவலை பலக் குறைவு.
Care kills the cat.

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாயா?
Trust not a broken staff.

மரத்தின் பழம் மரத்தண்டை விழும்.
(*ie*) 1. The result of one's deeds will come upon himself.
2. A drunken night makes a cloudy morning.

மறந்து செத்தேன் பிராணன் வா என்றால் வருமா?
(*ie*) doing something wicked thoughtlessly that cannot be rectified.
Evils come to us by ells, and goes away by inches.

மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கமாட்டானா?
God never sends mouths, but he sends meat. 425

மடியிலே கனமிருந்தால் வழியிலே பயம்
A thread-bare coat is armour proof against highway men.

மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டைப் பணியாரம்.
A lean fee is fit for a lazy clerk.

மாமியார் உடைத்தால் மண்கலம் மருமகள் உடைத்தால் பொன்கலம்
Faults, that are rich, are fair.

மாமியார் மெச்சின மருமகளுமில்லை, மருமகள் மெச்சின மாயியாருமில்லை.

Mother-in-law and daughter-in-law are a tempest and a hailstorm.

முதல் கோணல் முற்றுங் கோணல்.

A bad day never hath a good night. 500

மூக்காலும் காகம் முழுகிக்குளித்தாலும் கொக்காகுமா?

An ass is but an ass though laden with gold.

முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை முப்பது வருஷம் தாழ்ந்தவனுமில்லை.

Fortune and glass soon break, alas!

முட்டாளுக்கு என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.

Fools are pleased with their own blunders.

மூஞ்சு காட்டுகிறான்.

He has eaten sparrow-dumpling.

1. மூடர் கட்டுறவு முழுதும் அபாயம்.
2. பன்றிக்குப் பின்போன கன்றும் பீதின்னும்.

A wicked companion invites us all to hell. 505

மூக்கறுந்த மூளி காதறுந்த மூளியை பழித்தாளாம்.

Point not at other's spots with a foul finger.

மூஞ்சைப் பார் முகத்தைப் பார்.

If you will have a thing well done, do it yourself.

மூத்திரம் பெய்கிறதற்கு முன்னே முப்பத்திரண்டு குணம்.

A woman's mind and winter wind change oft.

மெய் சொல்லிக் கெட்டாருமில்லை பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை.

A man never surfeits of too much honesty.

மௌனம் கலக நாஸ்தி.

Speech is silver, Silence is golden. 510

ரத்த பாசம் விடாது.

Blood is thicker than water.

ருத்திராட்சப் பூனை உபதேசம் பண்ணினதுபோல்.

Beads about the neck and the devil in the heart.

வந்ததை வரப்படுத்திடா வல்லகாட்டு ராமா.

When you can't get bread oat-cakes are not amiss.

வருந்தி அழைத்தாலும் வாராது வாரா.

Every one has his lot.

வல்லவனுக்குப்புல் ஆயுதம்.

1. Pen and ink is wit's plough.
2. A man of courage never wants weapens. 515

வால ஜோசியன், விருத்த வைத்தியன்.

An old physician, and a young lawyer.

1. வாயிருந்தால் பிள்ளை பிழைக்கும்.
2. வாய் இருந்தால் மகளே வாழ்ந்துவிட்டு வருவாய்

1. He, that has no silver in his purse, should have silver in his tongue.
2. An ill plea should be well pleaded.

வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு.

1. Great boast small roast.
2. A long tongue has a short hand.

வாய் கொழுப்பு சீலையால் வடிக்கிறது.

Pride goes before and shame follows after.

வாழ்ந்தவன் கெட்டால் வர ஓட்டுக்கும் ஆகான்.

The highest tree hath the greatest fall. 520

வாய் நல்லதானால் ஊர் நல்லது.

1. Good language cures great souls.
2. All doors open to courtesy.

விதி யாரைவிட்டது.

Time tries all.

வித்துவான் தனவான்.

The truest wealth is that of understanding.

விருந்தும் மருந்தும் மூன்று பொழுது,

1. A constant guest is never welcome.
2. Fish and guests smell at three days old.

1. விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டதுபோல்
2. அஷ்டதரித்திரம் தாய்வீடு, அதிலும் தரித்திரம் மாமியார் வீடு.

Out of the frying pan into the fire. 525

விழித்தவன் கன்று நாகு கன்று. தூங்கினவன் கன்று கடாக்கன்று.

The sleeping fox catches no fowltry.

விழலுக்கு இறைத்த நீர்போல.
He is teaching a pig to play on a flute.

விழுந்தது பாம்பு கடித்தது மாங்கொட்டை.
Much ado about nothing.

விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது.
A jest driven too for brings home hate.

வெளுத்ததெல்லாம் பாலா? கறுத்ததெல்லாம் தண்ணீரா?
All, that glitters, is not gold. 530

வெள்ளம் வருமுன்னே அணை போடவேண்டும்.
1. A stitch in time saves nine.
2. Prevention is better than cure.

வெறுங் காதுக்கு ஓலைக்காது மேல்.
Something is better than nothing.

வெறுங்கை முழம் போடுமா?
No flying without wings.

வெறுங்கை தட்டான் இறும்பூதிச் செத்தான்.
1. An empty bag cannot stand upright.
2. Bare words buy no barly.

வெட்டிக்கொண்டு வரச்சொன்னால் கட்டிக்கொண்டு வர வேண்டும்.
All things are easy that are done willingly. 535

வெட்கம் கெட்டாலும் கெடட்டும் தொப்பையிட்டால் போதும்.
A fat man has no religion.

வெளுப்பானுக்கு வெளுப்பான் ஜாதி வண்ணான்.
Fear keeps garden better than the gardener.

வேகுகிற வீட்டில் பிடுங்குகிறது லாபம்.
Make the best of a bad bargain.

வேண்டாம் என்கிற பெண்டாட்டி கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்.
1. To crazy ship all winds are contrary.
2. Faults are thick when love is thin.

வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா?
Old woman's gold is not ugly. 540

PRINTED AT THE SRI BHARATHI PRESS, CHOOLAI MADRAS.

RANGARAJ & Co.,

MERCHANTS & COMMISSION AGENTS,

VEPERY, MADRAS.

DEALERS IN,

Sporting goods. Cricket bats, balls, leg-guards, nets and etc.

Tennis bats, balls, nets, posts and etc.

Badminton bats, posts, balls and shuttle-cocks and etc.

Hockey sticks, balls etc., Foot-balls, in-flators, nets and etc.

Gymnastic Apparatus. Horizontal bars parallel bars, Vaulting Horses and Furniture for Schools and colleges etc.

Exercises. Sandows Dumb-bells, Grip Dumb-bells, Chest Expanders etc.

SCHOOL AND COLLEGE BOOKS.

Prices and other details will be given on enquiry.